**நகர்மன்றம்,**
**போடிநாயக்கனூர் ,நாள்.27.03.2023**

2023ம் ஆண்டு மார்ச் மாதம் 27.03.2023ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திருமதி.ச.ராஜராஜேஸ்வரி,
நகர்மன்ற தலைவர்.

- **பொருள் எண்–1:**

இந்நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(கூ.பொ) அவர்களின் பிப்ரவரி 2023 ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்:1103/2020/சி1)
**தீர்மான எண் : 254 –** பதிவு செய்யப்பட்டது.

- **பொருள் எண்–2 :**

போடிநாயக்கனூர் நகராட்சி 11.07.1916ம் நாளிட்ட உள்ளாட்சி துறை அரசாணை எண்.1203 ன்படி, 01.09.1916 முதல் போடிநாயக்கனூர் மூன்றாம் நிலை நகராட்சியாக அமைக்கப்பட்டது. 05.10.1966ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையினரின் அரசாணை எண்-2008 ன்படி மூன்றாம் நிலையிலிருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. மேலும் 22.05.1998ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினரின் அரசாணை எண்.85ன்படி முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் பரப்பளவு 07.23 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள் தொகை 75675 ஆகும்.

1991ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் வார்டுகள் பிரிக்கப்பட்டதில் ,அரசாணை எண்.135, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(நகராட்சி தேர்தல்)துறை. நாள் 11.06.1996ன்படி இந்நகராட்சி 33 வார்டுகளாக பிரிக்கப்பட்டு தற்போது தொடர்ந்து நடைமுறையில் உள்ளது. தற்போதைய நிலப்பரப்பின்படி, இந்நகராட்சி ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை உள்ள மிகப்பெரிய நகரமாகும். மேலும் தமிழக அரசின் அரசாணை எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(எம்.எ-வி(2))துறை, நாள்:30.08.2019ன்படி சுமார் ரூ.10.00 கோடிக்கு மேல் வருவாய் உள்ள நகராட்சியை தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்திட அரசு ஆணையிடப்பட்டுள்ளது. இந்நகராட்சியின் கடந்த மூன்று ஆண்டுகளில் வருவாய் மூலதன நிதிமூலம் இந்நகராட்சியின் வருவாய் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| வ.எண் | ஆண்டு | நிதி | ஆண்டு வருமானம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2019-2020 | வருவாய் மூலதன நிதி | 1454.36 |
| 2. | 2020-2021 | வருவாய் மூலதன நிதி | 1530.29 |
| 3. | 2021-2022 | வருவாய் மூலதன நிதி | 1504.47 |

இந்நகராட்சியின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு பொதுமக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு தற்போதுள்ள முதல்நிலை நகராட்சியிலிருந்து தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்திட அரசுக்கு உரிய பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்:0985/2023/சி1)

**தீர்மான எண் : 255 –** அனுமதிக்கப்பட்டது.

❖ **பொருள் எண்–3:**

2021-22 ஆம் கணக்கு ஆண்டிற்கு (பொங்கல் பண்டிகை கொண்டாட) "C" மற்றும் "D" பிரிவு சார்ந்த முறையான காலமுறைச் சம்பளம் பெறும் அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களுக்கு ரூ.3,000/- தற்காலிக மிகை ஊதியமும் சத்துணவு பணியாளர்கள் உட்பட தொகுப்பூதிய பணியாளர்களுக்கு ரூ.1,000/- சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் வழங்க வரப்பெற்ற அரசாணை(நிலை)எண்-373, நிதி(படிகள்)த் துறை, நாள்-26.12.2022 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்:0999/2023/சி1)

**தீர்மான எண் : 256 –** பதிவு செய்யப்பட்டது.

❖ **பொருள் எண்–4:**

அரசு அலுவலர்களுக்கும் உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களுக்கும் 01.01.2023 முதல் , அகவிலைப்படி 34%லிருந்து 38%ஆக அகவிலைப்படி வீதம் உயர்த்தப்பட்ட அரசாணை(நிலை)எண்-7, நிதி(படிகள்)த் துறை, நாள்-06.01.2023 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

( ந.க.எண்:0999/2023/சி1 )

**தீர்மான எண் : 257 –** பதிவு செய்யப்பட்டது.

❖ **பொருள் எண்–5:**

நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப பணியிடங்களுக்கான வரையறை நிர்ணயம் செய்து அதற்கேற்ப புதிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் ஏற்கெனவே உள்ள பணியிடங்களை முறைப்படுத்துதலுக்கான அரசாணை(நிலை)எண்-10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை, நாள்-23.01.2023 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

( ந.க.எண்:0999/2023/சி1 )
**தீர்மான எண் : 258 –** பதிவு செய்யப்பட்டது.

❖ **பொருள் எண்–6:**

இந்நகராட்சியில் அலுவலக உதவியாளராக கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, 07.11.2019 ல் பணியில் சேர்ந்த திரு.சு.அசோக் த/பெ (லேட்)சுருளி என்பவர், 27.01.2020 முதல் நாளது தேதி வரை எவ்வித தகவலின்றி பணிக்கு வராதது குறித்து, குறிப்பாணைகள் வழங்கியும் எவ்வித பதிலளிக்கவும் மற்றும் பணிக்கு திரும்பவும் முன்வரவில்லை. எனவே, பணிக்கு திரும்பாவிடில் பணிநீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என, இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்-08.02.2023ன்படி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சியரகம், தேனி அவர்கள் வாயிலாக தினமலர் தினசரி நாளிதழில் (பக்கம் எண்-7) 12.02.2023 அன்று இறுதி அறிவிப்பு பிரசுரம் செய்தமைக்கு , மேற்படி நிறுவனத்தின் 11.02.2023 ஆம் தேதிய பட்டியலில் ரூ.8,715/- வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி தொகை ரூ.8,715/-யினை தினமலர் தினசரி நாளிதழ் நிறுவனத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.4926/2019/சி1)
**தீர்மான எண் : 259 –** அனுமதிக்கப்பட்டது.

❖ **பொருள் எண்–7:**

இந்நகராட்சியில் வருவாய் ஆய்வராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்ற திரு.பி.நடராஜன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு WP(MD)No:13638 of 2016ல் , 08.12.2022 அன்று மனுதாரருக்கு சாதகமாக வரப்பெற்ற தீர்ப்பின்மீது , மேல்முறையீடு செய்வது குறித்து சட்டக்கருத்துரு வழங்கியமைக்கு, திரு.க.ஹேமகார்த்திகேயன், அரசு வழக்கறிஞர் அவர்களின் 10.01.2023 ஆம் தேதிய கடிதத்தின்படி ரூ.5,000/- மற்றும் மேற்படி வழக்கில், இந்நகராட்சி சார்பில் அபிடவிட் மற்றும் வக்காளத்து தாக்கல் செய்தமைக்கு 28.01.2023ஆம் தேதிய கடிதத்தின்படி, கட்டணம் ரூ.10,000/- மற்றும் ரூ.5,000/- மொத்தம் ரூ.20,000/- (இருபதாயிரம் மட்டும்) வழக்கு நடத்துவதற்கு ஏதுவாக அவசியம் கருதி, 10.02.2023 அன்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி பொது நிதியில் இருந்து தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்:4466/2016/சி1 )

**தீர்மான எண் : 260 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## ❖ பொருள் எண்–8:

**போடிநாயக்கனூர் நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதியின் கீழ், நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி கீழ்காணும் பணிக்கு** 03.01.2023**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.**

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்-1 முதல் 10 வரை பழுதடைந்த சிறுபாலங்களை அகற்றி புதிய சிறுபாலம் அமைக்கும் பணி | ரூ.6,00,000/- | C.செந்தில்குமார், ஒப்பந்தகாரர், போடி | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.நடராஜன், ஒப்பந்தகாரர், போடி | 0.79 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:**

**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள C.செந்தில்குமார் ,ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் , பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.**

(**ந.க.எண்.** 3334 /2022/**இ**1)

**தீர்மான எண் : 261 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## ❖ பொருள் எண்–9

**போடிநாயக்கனூர் நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதியின் கீழ், நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி கீழ்காணும் பணிக்கு** 03.01.2023**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.**

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சியில் வார்டு-10, புதுக்காலனி தெரு, வார்டு எண்-16 ,தோகைமலை சந்து, வார்டு எண்-18, வ.உ.சி நகர் வடக்கு தெரு ,வார்டு எண்-19, ஒழுகல் பாதை மற்றும் வார்டு எண்-31-குப்பழகிரி தோட்டம் கிழக்கு தெரு ஆகிய ஐந்து இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின்விசைப்பம்பு கட்டும் பணி | ரூ.10,00,000/- | பி.நடராஜன், ஒப்பந்தகாரர், போடி | 0.52% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | எல்.எல்லப்பன் , ஒப்பந்தகாரர், போடி | 0.54 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**:

**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள பி.நடராஜன், ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும், பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.**

(**ந.க.எண்.** 3274 /2022/**இ**1)

**தீர்மான எண் : 262 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் எண்–10:

**போடிநாயக்கனூர் நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதியின் கீழ், நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி கீழ்காணும் பணிக்கு** 03.01.2023**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.**

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சிறுமின்விசை பம்புகளில் உள்ள பைப்லைன்களை நீடிப்பு வார்டு எண்-1,2,10,13,17 மற்றும் 20 ஆகிய வார்டுகளில் பணிகள் மேற்கொள்வதற்கான பைப் மற்றும் உதிரிசாமான்கள் விநியோகம் செய்யும் பணி | ரூ.2,00,000/- | பி.நடராஜன், ஒப்பந்தகாரர், போடி | 0.46% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | எல்.எல்லப்பன், ஒப்பந்தகாரர், போடி | 0.43 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு** :

**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள பி.நடராஜன், ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும், பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.**

(**ந.க.எண்.** 3878 /2022/**இ**1)

**தீர்மான எண் : 263–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## ❖ பொருள் எண்–11:

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் (ந.க.எண்–37307/2022/SBM,நாள்–10.02.202) தூய்மை இந்தியா திட்டம் 2.0ன் கீழ் ODF+ மற்றும் GFC சான்றிதழ் பெற தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவதற்காக நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக PMU அவர்களின் 22.02.2023ம் தேதிய நேரடி ஆய்வு அறிவுரைகளின் படி, கீழ்காணும் 3 சமுதாய கழிப்பிடத்தை சீர் அமைத்து ,பழுதான பொருட்களை சரிசெய்வதற்கு, நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி கீழ்காணும் பணிக்கு 09.03.2023ம் தேதி

ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எ ண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட பெரியாண்டவர் ஹைரோடு (ஆடுவதை கூடம்) சமுதாய கழிப்பிடம் , அம்மாகுளம் 1 வது தெரு சமுதாய கழிப்பிடம் மற்றும் புதுகாலணி 4 வது தெரு சமுதாய கழிப்பிடம் மராமத்து பணி | ரூ.15,50,000/– | L.எல்லப்பன், ஒப்பந்தகாரர், போடி | 0.28% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | பி.நடராஜன், ஒப்பந்தகாரர், போடி | 0.02 % மதிப்பீட்டை விட குறைவு |

<u>அலுவலக குறிப்பு</u> :

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள பி.நடராஜன் ,ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.** 0717/2023/**இ**1)

**தீர்மான எண் : 264–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் எண்–12:</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் (ந.க.எண்–37307/2022/SBM,நாள்–10.02.202) தூய்மை இந்தியா திட்டம் 2.0ன் கீழ் ODF+ மற்றும் GFC சான்றிதழ் பெற தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவதற்காக நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக PMU அவர்களின் 22.02.2023ம் தேதிய நேரடி ஆய்வு அறிவுரைகளின் படி, கீழ்காணும் 3 சமுதாய கழிப்பிடத்தை சீர் அமைத்து ,பழுதான பொருட்களை சரிசெய்வதற்கு, நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி கீழ்காணும் பணிக்கு 09.03.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எ ண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட கீழவெளி வீதி சமுதாய கழிப்பிடம், எஸ்.எஸ் புரம் சமுதாய கழிப்பிடம், பெரியாண்டவர் ஹைரோடு (பழைய பேருந்து நிலையம்) சமுதாய கழிப்பிடம் மற்றும் ஒழுகால் பாதை தெரு சமுதாய கழிப்பிடம் மராமத்து பணி | ரூ.15,50,000/– | L.எல்லப்பன், ஒப்பந்தகாரர், போடி | 0.14% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | பி.நடராஜன், ஒப்பந்தகாரர், போடி | 0.02 % மதிப்பீட்டை விட குறைவு |

**<u>அலுவலக குறிப்பு</u> :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள பி.நடராஜன் ,ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.** 0718/2023/**இ**1)

**தீர்மான எண் : 265–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்–13:</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் **(**ந.க.எண்**– 37307/2022/**SBM,நாள்**–10.02.202)** தூய்மை இந்தியா திட்டம் **2.0**ன் கீழ் ODF+ மற்றும் GFC சான்றிதழ் பெற தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவதற்காக நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக PMU அவர்களின் **22.02.2023**ம் தேதிய நேரடி ஆய்வு அறிவுரைகளின் படி, கீழ்காணும் **3** சமுதாய கழிப்பிடத்தை சீர் அமைத்து ,பழுதான பொருட்களை சரிசெய்வதற்கு, நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி கீழ்காணும் பணிக்கு **09.03.2023**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட **வார்டு எண்**–3, **ஜமீன் தோப்பு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் பின்புறம் உள்ள சமுதாய கழிப்பிடத்தை மராமத்து பணி** | ரூ.**4,50,000/–** | L.எல்லப்பன், ஒப்பந்தகாரர், போடி | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.நடராஜன், ஒப்பந்தகாரர், போடி | 0.32 % மதிப்பீட்டை விட அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு</u> :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள L.எல்லப்பன் ,ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.** 3833/2022/**இ**1)

**தீர்மான எண் : 266–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–14:</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் (ந.க.எண்–37307/2022/SBM,நாள்–10.02.202) தூய்மை இந்தியா திட்டம் 2.0ன் கீழ் ODF+ மற்றும் GFC சான்றிதழ் பெற தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவதற்காக நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக PMU அவர்களின் 22.02.2023ம் தேதிய நேரடி ஆய்வு அறிவுரைகளின் படி, கீழ்காணும் 3 சமுதாய கழிப்பிடத்தை சீர் அமைத்து ,பழுதான பொருட்களை சரிசெய்வதற்கு, நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி கீழ்காணும் பணிக்கு 09.03.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–12 மற்றும் வார்டு எண்–30ல் உள்ள சமுதாயகழிப்பிடத்தில் மராமத்து பணி | ரூ.10,00,000/– | L.எல்லப்பன், ஒப்பந்தகாரர், போடி | 0.04% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.நடராஜன், ஒப்பந்தகாரர், போடி | 0.40 % மதிப்பீட்டை விட அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு</u> :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள L.எல்லப்பன் ,ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.** 0584/2023/**இ**1)

**தீர்மான எண் : 267–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–15:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சியில் 2022–23 குடிநீர் வடிகால் நிதியின் கீழ், நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி கீழ்காணும் பணிக்கு 17.03.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | **போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியாகம் செய்யும் பிரதான குழாய் மற்றும் துணை பகிர்மான குழாய்கள் பழுது ஏற்பட்டு குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுவதால், பிரதான குழாய் மற்றும் துணை பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து குடிநீர் விநியாகம் செய்வதற்கு ஓராண்டு பராமரிப்பு பணி** | ரூ.8,00,000/– | L.எல்லப்பன், ஒப்பந்தகாரர், போடி | 0.06% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.நடராஜன், ஒப்பந்தகாரர், போடி | 0.19 % மதிப்பீட்டை விட அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு</u> :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள L.எல்லப்பன் ,ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் , பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 3729 /2022/இ1)

**தீர்மான எண் : 268–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–16:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சியில் **2022–23** பொதுநிதியின் கீழ், நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி கீழ்காணும் பணிக்கு **17.03.2023**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | **தென்றல் நகரில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார மையத்தின் முன்புறம் தரைதளம் மற்றும் நிழற்கூரை அமைக்கவும், ஜமீன் தோப்பு ரோட்டில் உள்ள நகர்நலமையத்தின் முன்புறம் பேவர் ப்ளாக் தளம் அமைத்தல் , நிழற்கூரை அமைக்கும் பணிக்கு** | ரூ.8,00,000/– | L.எல்லப்பன், ஒப்பந்தகாரர், போடி | 0.07% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.நடராஜன், ஒப்பந்தகாரர், போடி | 0.37 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள L.எல்லப்பன் ,ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் , பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 3834 /2022/இ1)

**தீர்மான எண் :** 269– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **பொருள் எண்–17:**

போடிநாயக்கனூர் நகராட்சியில் 2022–23 பொதுநிதியின் கீழ், நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி கீழ்காணும் பணிக்கு 17.03.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையத்தில் உள்ள தற்காலிக இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் போடப்பட்டுள்ள தகர செட்டை பிரித்து புதிதாக கட்டப்பட்டுள்ள நிரந்தர இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் அத்தகர செட்டை அமைக்கும் பணி | ரூ.2,00,000/– | L.எல்லப்பன், ஒப்பந்தகாரர், போடி | 0.002% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.நடராஜன், ஒப்பந்தகாரர், போடி | 0.004 % மதிப்பீட்டை விட குறைவு |

**அலுவலக குறிப்பு :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.002% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள L.எல்லப்பன் ,ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் , பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 0706 /2022/இ1)

**தீர்மான எண் :** 270– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **பொருள் எண்–18:**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் 70 வது பிறந்த நாளை முன்னிட்டு போடிநாயக்கனூர் நகராட்சி நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள், ஆணையாளர் மற்றும் அனைத்து பணியாளர்கள் சார்பில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்து தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்காணும் படி, விளம்பர கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விளம்பர நிறுவனம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | Kal Publications (P)Ltd, Madurai (தினகரன் நாளிதழ்) | ரூ.19,740/– |
| 2 | மாலை தமிழகம்,சென்னை | ரூ.15,330/– |

**<u>அலுவலக குறிப்பு</u> :** அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1011 /2023/இ1)

**தீர்மான எண் : 271–** அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–19:</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண் 5990/2022/SBM ,நாள்.11.04.2022ன் படி , Swachh Bharat Mission (Urban) 2.0ன் கீழ், போடிநாயக்கனூர் நகராட்சிக்கு பொதுக்கழிப்பிடம் ரூ.36.28 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது,மேலும் இப்பணிக்கான வழிகாட்டி நெறிமுறைகளில் ஏற்கனவே உள்ள பொதுகழிப்பிடம் கட்டிமுடிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்த கட்டிடத்தை மட்டுமே இடித்து விட்டு புதிதாக பொதுகழிப்பிடம் கட்டிக்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்நகராட்சி பேருந்துநிலையத்தில் உள்ள கழிப்பிடம் கட்டி 12 ஆண்டுகள் மட்டுமே ஆனதால் புதிதாக கழிப்பிடம் கட்டிக்கொள்ள வழிவகையில்லை என்பதால் இப்பணி ரத்து செய்யப்பட்டது, தற்சமயம் பொதுகழிப்பிடத்தின் அருகில் நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் Swachh Bharat Mission (Urban) 2.0ன் கீழ், ரூ.36.28 இலட்சம் மதிப்பீட்டில் பொதுகழிப்பிடம் கட்டிக்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :** மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண். 1172 /2022/இ1)

**தீர்மான எண் : 272–** பதிவு செய்யப்பட்டது. மேலும் அவ்விடத்தில் பழுதடைந்த பயணியர் தங்கும் விடுதி கட்டிடத்தினை இடித்து புதிதாக சமையல்கூடம் கட்டிக்கொள்ளலாம் என திருத்தி வாசிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–20:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் உள்ள அனுமதி பெற்ற மனைபிரிவில் அமைந்துள்ள கீழ்கண்ட பூங்காவை பராமரிக்க கோரி குடியிருப்போர் நல சங்கத்தினர் கோரியுள்ளார்கள்.

| வ. எண் | பூங்கா அமைந்துள்ள இடம் | பராமரிக்க கோரும் சங்கத்தினர் |
|---|---|---|
| 1 | சீனிவாசன் நகர், | சீனிவாசன் நகர், நலசங்கம் போடிநாயக்கனூர் |

| | | |
|---|---|---|
| | போடிநாயக்கனூர் | |
| 2 | வ.உ.சி. நகர், போடிநாயக்கனூர் (சந்தியாஸ் மஹால் எதிர்புறம்) | வ.உ.சி. நகர், நலசங்கம் போடிநாயக்கனூர் |

மேற்கண்ட பூங்கா நகராட்சியால் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது. இப்பூங்காவை தொடந்து பராமரிக்க மேற்படி பகுதியில் உள்ள குடியிருப்போர் நலசங்கத்தினர் முலம் பராமரிப்பு செய்ய அனுமதி கோரிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** பூங்காவை குடியிருப்போர் நலசங்கத்தினர் முலம் பராமரிப்பு செய்ய சட்ட விதிகளுக்கு உட்பட்டு நிபந்தனைகள் அடிப்படையில் மன்றம் பரிசீலனை செய்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.2997/2022/எப்1)

**தீர்மான எண் :** 273– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **பொருள் எண்–21:**

போடிநாயக்கனூர் நகராட்சி நகரளவை ஆவணங்களின் படி சர்வே வார்டு எண்.2, பிளாக்.30, நகரளவை எண்.4416 மற்றும் 4409 சர்வே வார்டு எண்.2, பிளாக்.31, நகரளவை எண்.4117 இல் முறையே 274.10 ச.மீ, 280.82 ச.மீ மற்றும் 92.30 ச.மீ இடத்தை தேனி–போடிநாயக்கனூர் அகல இரயில் பாதை திட்டத்திற்கு நடைமேடை மற்றும் இருப்பு பாதை அமைக்க ஏதுவாக இரயில்வே துறைக்கு நில உரிமை மாற்றம் செய்ய நகர்மன்றத்தின் ஒப்புதல் கோரி தேனி மாவட்ட ஆட்சியரின் கூடுதல் உதவியாளர் (நிலம்) அவர்களின் கடிதம் ந.க.எண்.2124/2022/ஆ3 நாள்.03.01.2023 மன்றத்தின் பார்வைக்கு. மேலும், கீழ்கண்ட விவரப்படி சர்கார் புறம்போக்கு தெரு என பதிவாகி உள்ள இடத்தை இரயில்வே துறைக்கு நிலஉரிமை மாற்றம் செய்ய ஆட்சேபனை இல்லை என சான்று வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு/பிளாக் | நகரளவு எண் | மொத்த விஸ்த்திரணம் | நில உரிமை மாற்ற விஸ்த்திரணம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு–2<br>பிளாக்–30 | 4416<br>4409 | 4857 ச.மீ<br>1969 ச.மீ | 274.10 ச.மீ<br>280.82 ச.மீ |
| 2 | வார்டு–2<br>பிளாக்–31 | 4117 | 3109 ச.மீ | 92.30 ச.மீ |

**அலுவலகக்குறிப்பு:** மேற்கண்ட நில உரிமை மாற்றம் கோரும் இடத்தை இரயில்வே துறைக்கு நிலஉரிமை மாற்றம் செய்ய ஆட்சேபனை இல்லை என சான்று வழங்க அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2712/2022/எப்1)

**தீர்மான எண் :** 274– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## ❖ பொருள் எண்–22:

போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் பாரத பிரதமர் அவர்களின் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் [Day NULM] திட்டத்தின் கீழ் சாலையோர வியாபாரிகள் ஆதரவு திட்டத்தின் கீழ் கடனுதவி பெற்று திரும்பி செலுத்திய நபர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் தற்போது Se Samritthi என திருத்திய தலைப்பில் மேற்படி திட்டத்தில் சாலையோர வியாபாரி மற்றும் குடும்பத்தினர் இத்திட்டத்தில் பயன்பெறும் வகையில் புதிய மென்பொருள் தயார் செய்து தகுதியான 534 நபர்கள் தனிப்பட்ட விபரங்கள் மற்றும் குடும்ப உறுப்பினர் விபரங்கள் மென்பொருள் பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டது. மேலும், மேற்படி பணியினை தொண்டு நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும் அதற்கு உரிய செலவு தொகையான NULM திட்ட நிதியில் மேற்கொள்ளவும் நபர் ஒன்றுக்கு ரூ.50/– வீதம் உத்தேச செலவினம் ரூ.26700/–யை மன்றத்தின் ஒப்புதல் பெற்று தொண்டு நிறுவனம் மூலம் பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

1. இப்பணிக்கு உரிய செலவினத்தை NULM திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள m/s Anthens Charitable and Educational Trust நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொண்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.0629/2023/எப்1)

**தீர்மான எண் :** 275– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## ❖ பொருள் எண்–23:

போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்.01 இல் புதிதாக நியாய விலைக்கடை கட்டிடம் அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்து தர கோரி இந்நகராட்சி 1 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை வைத்துள்ளார். அதன்படி இந்நகராட்நி நகரநார் அளவர் புலதணிக்கை செய்து நகரளவை ஆவணங்களின் படி வார்டு.7, பிளாக்.6, நகரளவு எண்.2298/2 நர்கார் புறம்போக்கு விஸ்த்திரணம் 0.2225.0 ச.மீ இடம்

ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம் பெயரில் பதிவுகள் உள்ள இடத்தில் **1** வது வார்டு நியாய விலை கட்டிம் கட்ட வடக்குபுலத்தில் சுமார் **6.0** மீ x 10.0மீ விஸ்த்திரணம் **60** ச.மீ இடத்தை மட்டும் நில ஒதுக்கீடு செய்து தர கோரி மாவட்ட ஆட்சியர் தேனி அவர்களுக்கு திட்ட பிரோரணை அனுப்ப மன்றத்தின் அனும. வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.178/2023/எப்1)

***தீர்மான எண் :*** 276– அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–24:</u>**

இந்நகராட்சியில் **2017–2018**ம் ஆண்டு பொது நிதி மற்றும் **14**வது நிதிக் குழுவின் கீழ் ஒப்பந்தப் பணிகள் மேற்கொண்ட ஒப்பந்ததாரர் திரு.எஸ்.சிவக்குமார் என்பவருக்கு மேற்படி பணிகளுக்கு இந்நகராட்சியால் வைப்புத் தொகையினை **(**EMD), (PSD) திரும்ப வழங்கக்கோரி **14.11.2022**ம் தேதியில் விண்ணபித்துள்ளார். மேலும் பொறியியல் பிரிவு அறிக்கையின்படியும் ,காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேடு **(**தொகுதி–**2)**–ன்படியும், திரு. எஸ்.சிவக்குமார் என்ற பெயருக்கு கீழ்க்காணும் தொகை விடுவிக்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாள் | வைப்பு தொகை பதிவேடு பக்க எண்/ வரிசை எண்(தொகுதி–2) | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | 14.11.2017 | 3/28 | 10,000/- |
| 2. | 20.04.2018 | 17/177 | 1,25,606/- |
| 3. | 17.04.2018 | 16/175 | **47,485/–** |
| 4. | 22.05.2018 | 6/63 | 2,00,000/- |
| | | மொத்தம் | 3,83,091/- |

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>** மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 3219/2022/பி3)**

***தீர்மான எண் :*** 277– அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–25:</u>**

திரு.ஜெ.சண்முகம், ஒப்பந்ததாரர் **2012–2013, 2017–2018** ஆம் ஆண்டுகளில், இந்நகராட்சியில் பல்வேறு ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்ள செலுத்திய கூடுதல் வைப்புத் தொகை(ASD) மற்றும் பட்டியல் தொகை அனுமதிக்கப்பட்டதில் பிடித்தம் செய்யப்பட்ட பிணை வைப்புத் தொகை (PSD)யினை திரும்ப வழங்கக்கோரி **08.11.2022**ம் தேதியில் விண்ணப்பித்துள்ளார். பொறியியல் பிரிவு அறிக்கையின்படியும் ,காலங்கடந்த வைப்புத்தொகை

பதிவேடு (தொகுதி–1)–ன்படியும், திரு. ஜெ.சண்முகம், என்பவர் பெயரில், கீழ்க்காணும் விபரப்படி உள்ள தொகையினை விடுவிக்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாள் | காலங்கடந்த வைப்பு தொகை பதிவேடு (தொகுதி–1 (ம) 2) வரிசை எண்: | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | 25.10.2012 | 36-417 | 1300 |
| 2. | 19.11.2012 | 36-418 | 2650 |
| 3. | 25.10.2012 | 36-419 | 3750 |
| 4. | 25.10.2012 | 36-420 | 3500 |
| 5. | 2.1.2013 | 38-446 | 2000 |
| 6. | 2.1.2013 | 39-455 | 2750 |
| 7. | 29.1.2013 | 40-466 | 3500 |
| 8. | 29.1.2013 | 40-467 | 3750 |
| 9. | 27.2.2013 | 41-482 | 2300 |
| 10. | 27.2.2013 | 41-483 | 500 |
| 11. | 27.2.2013 | 42-484 | 3200 |
| 12. | 22.3.2013 | 43-497 | 2750 |
| 13. | 1.3.2013 | 29-543 | 7250 |
| 14. | 27.7.2013 | 48-639 | 24000 |
| 15. | 27.7.2013 | 48-640 | 34194 |
| | | மொத்தம் | 97394 |

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.3163/2022/பி3)**
**தீர்மான எண் :** 278– அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–26:</u>**

நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் **9** வாகனங்களின் வாகன காப்பீட்டு உரிமம் **25.03.2023**ம் உடன் முடிவடைவதால் நேஷனல் இன்சூரன்ஸ் கோ லிமிடேட் போடி நிறுவனம் மூலம் ஒரு வருட காலத்திற்கு வாகன காப்பீட்டு உரிமம் நீட்டித்து கொள்ள கேட்பு வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது வாகனங்களுக்கு ஒரு வருட காலத்திற்கு வாகன காப்பீடு உரிமம் நிடித்து கொள்ளவும் அதற்கான செலவினத்தொகை ரூ.**3.00**/ லட்சம் நேஷனல் இன்சூரன்ஸ் கோ லிமிடேட் போடி நிறுவத்திற்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 2275/2021/H2.**
**தீர்மான எண் :** 279– அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–27:</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் , பொதுசுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பைரேத்திரம் எக்ஸ்ட்ராக்ட் 2 % மருத்து வாங்கி விநியோகம் செய்வதற்கு 16.02.2023 ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியை ஒப்பு நோக்கு செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருள் விபரம் | முருகன்& கோ<br>ELUVAMALAI ERODE | RJ ENTERPRISES<br>KR PALAYAM ERODE |
|---|---|---|---|
| 1 | பைரேத்திரம்<br>எக்ஸ்ட்ராக்ட் 2% | 1 லிட்டர் ரூ1180/- | 1 லிட்டர் ரூ1240/- |

**அலுவலகக்குறிப்பு** : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய முருகன் & கோ ELUVAMALAI ERODE நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியையும் செலவினத்தையும் ரூ4,00/- இலட்சம் மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்: 0123 / 2023 / எச்1 )

**தீர்மான எண் : 280–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–28:</u>**

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 கீழ் ODF + மற்றும் GFC சான்றிதழ் பெறுவதற்கும் தூய்மை நகரங்களுக்கான போட்டியில் கூடுதல் மதிப்பெண்கள் பெறுவதற்கும் நகரின் வணிகப்பகுதிகளில் இரட்டை குப்பைத்தொட்டிகள் (TWINBIN) வைத்திட கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் ரூ3.00/- இலட்சத்திற்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளும் பணிக்கு நகர்மன்றம் அனுமதி பெற்று 13.03.2023 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்களின் விபரம் | இசையா அசோசியேட்ஸ் பழைய வத்தலக்குண்டு | ரத்னா ஏஜென்சிஸ் கோயமுத்தூர் |
|---|---|---|---|
| 1 | இரட்டை குப்பைத்தொட்டிகள் (டிவின் பின்) | ரூ5000 /- ( +) 18% ஜிஎஸ்டி ஒரு எண்ணம் | ரூ6000 /- ( +) 18% ஜிஎஸ்டி ஒரு எண்ணம் |

**அலுவலகக்குறிப்பு** :

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய இசையா அசோசியேட்ஸ் பழைய வத்தலக்குண்டு நிறுவனத்தினை மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்: 605 / 2023 / எச்1 )

**தீர்மான எண் : 281–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–29:</u>**

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016, விதி 4-ன் படியும் இந்தியா திட்டம் 2.0 இல் வழிகாட்டு நெறிமுறைகளின் படியும் வீடுகளில் சானிட்டாரி நாப்கின் மற்றும் டயாப்பர்கள் தனியே சேகரித்து தனி உறையில் தூய்மை பணியாளரிடம் வழங்க பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பைகளை கொள்முதல் செய்யும் பணிகளுக்காக உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து 13.03.2023 ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட , இரண்டு விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | இசையா அசோசியேட்ஸ் பழைய வத்தலக்குண்டு | ஒரு எண்ணம் ரூ8/- + (ஜிஎஸ்டி18%) (ரூபாய் எட்டு மட்டும்) 5000 எண்ணம் ரூ40000/- + (ஜிஎஸ்டி18%) (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) |
| 2, | ரத்னா ஏஜென்சி கோயம்முத்தூர் | ஒரு எண்ணம் ரூ10/- + (ஜிஎஸ்டி18%) (ரூபாய் எட்டு மட்டும்) 5000 எண்ணம் ரூ50000/- + (ஜிஎஸ்டி18%) (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) |

அலுவலகக் குறிப்பு: வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள இசையா அசோசியேட்ஸ் பழைய வத்தலக்குண்டு அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:3661/2022/எச்1)

**தீர்மான எண் : 282–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–30:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் மற்றும் தூய்மை நகரங்களுக்கான பொதுமக்கள் இயக்கத்தின் கீழ் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி பயன்படுத்திட மன்ற அனுமதியும் அதற்கான உத்தேச செலவினம் ரூ 1.00/- இலட்சம் நகராட்சி பொது

நிதியில் மேற்கொள்ள அனுமதி பெற்று 23.02.2023 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பொருட்களின் விபரம் | இசையா அசோசியேட்ஸ் திண்டுக்கல் TD PIN CODE 624202 | ரத்னா ஏஜென்சிஸ் 30, 100 FEET ROAD GANDHI PURAM COIMBATORE |
|---|---|---|---|
| 1 | புரொஜெக்டர் 1 எண்ணம்<br>ஸ்பீக்கர் 1 எண்ணம்<br>ஸ்கிரின் 1 எண்ணம் | ரூ67000+<br>ஜிஎஸ்டி 18 சதவீதம்)ரூ12060 =ரூ79060/- | ரூ70000+<br>ஜிஎஸ்டி 18 சதவீதம்)<br>ரூ12600=ரூ82600/- |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய இசையா அசோசியேட்ஸ் திண்டுக்கல் DT நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்: 3707/2022 / எச்1 )

**தீர்மான எண் : 283–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–31:</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் கால்நடைகளை பிடித்து அப்புறப்படுத்தவும் , பிடிக்கக்கூடிய செலவு, வாகன ஏற்பாடு, மைக் விளம்பரம், மாடு பிடிப்பவர்களுக்கு ஊதியம் உட்பட பணிகளுக்காக உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து 23.02.2023 ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட , இரண்டு விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | மாஸ் டிரஸ்ட் திருநெல்வேலி | ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) |
| 2, | ஹெட் டிரஸ்ட் எம்ஜிஆர் நகர் தேனி | ரூ.1200/- (ரூபாய் ஆயிரத்தி இருநூறு மட்டும்) |

**அலுவலகக் குறிப்பு**: வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மாஸ் டிரஸ்ட் திருநெல்வேலி அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:3109/2022/எச்1)

**தீர்மான எண் : 284–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–32:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சி பகுதிகளில் உள்ள மழைநீர் கழிவு நீர் செல்லும் கால்வாய்கள் மழைநீர்கழிவு நீர் செல்லும் ஓடைகள் மழைநீர் கால்வாய்களில் உள்ள அடைப்புகளை சுத்தம் செய்து நீர்நிலைகளை பாதுகாத்திட மத்திய மாநில அரசுகள் அறிவுறுத்தியதன் படியும் பொதுமக்களிடமிருந்து கால்வாய் அடைப்பு ஏற்பட்டு கழிவுகளை தேக்கம் ஏற்படுவதால் கொசு உற்பத்தி ஏற்பட்டு நோய் பரவும் அபாயம் உள்ளது என்று புகார்கள் வருவதாலும், உடனடி நடவடிக்கையாக அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் அல்லது தனியார் முலமாக ஜேசிபி , செயின்டோசர் மற்றும் டிராக்டர் பயன்படுத்தி கழிவுகளை அப்புறப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளவும் இதற்காக ஆகும் உத்தேச செலவினம் ரு5.00/- இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** :

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 1010 / 2023 / **எச்**1 )

**தீர்மான எண் : 285–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–33:</u>**

பேருந்து நிலையத்தில் நூற்றாண்டு நிறைவு திட்டத்தின் கீழ் **16**கடைகள் கட்டுவதற்காக ஏற்கனவே உள்ள கீழேக்கண்ட கடைகளை மார்ச் **2022–**ம் மாத இறுதியில் இடிக்கப்பட்டது. அதற்கு **4/2022** முதல் **10/2022** வரை கேட்பு எழுந்துள்ளதை நீக்கம் செய்ய மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **கேட்பு எண்** | **குத்தகைதாரர் பெயர்** | **நிலுவை காலம்** | **மொத்த நிலுவைத் தொகை** |
|---|---|---|---|---|
| 1 | 120/504 | பி.தவமணி | ஏப்ரல் 22முதல் அக்டோபர்–22 | ரூ.22344/– |
| 2. | 120/510 | கே. நாகராஜ் | ஏப்ரல்22 முதல் அக்டோபர்22 | ரூ.14098/– |
| 3. | 120/511 | ஜெ.அன்பரசன் | ஏப்ரல்22 முதல் அக்டோபர்22 | ரூ.14098/– |
| 4 | 120/522 | பி.மலர்கொடி | 2020–21 செப்டம்பர் முதல் 2021–22அக்டோபர் வரை | ரூ.33485/– |
| 5 | 120/527 | ஆவில்பாலகம் | 2020–21 மார்ச்முதல் 2021–22அக்டோபர் வரை | ரூ.16061/– |
| 6 | 120/524 | பி.கே.நூர்தீன் | 2020–21 செப்டம்பர் முதல் 2021–22அக்டோபர் வரை | ரூ.35434/– |
| 7 | 120/525 | என்.ஜெயக்குமார் | 2020–21 செப்டம்பர் முதல் 2021–22அக்டோபர் வரை | ரூ.21056/– |
| | | | மொத்தம் | ரூ.156576/– |

**அலுவலக குறிப்பு :** மேற்கண்ட தொகையினை கேட்பிலிருந்து நீக்கம் செய்யலாம்.
(ந.க.எண். 855 /2023/அ2)
**தீர்மான எண் :** 286– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **பொருள் எண்–34:**

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழேக்கண்ட விபரப்படி உள்ளான கடைகள் அதற்கு எதிரே குறிப்பிட்ட நாளில் கடைகள் பூட்டி சீல் வைக்கப்பட்ட பின்பு கேட்பு எழுந்துள்ளது. அதனை கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வ. எண் | கேட்பு எண் | குத்தகைதாரர் பெயர் | இனம் | மொத்த நிலுவைத் தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 120/1623 | பாலு | பேருந்துநிலையகடைஎண்.8 2017–2018 | ரூ.12994/– | 25.07.2017இல் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. |
| 2 | 120/1620 | எம்.அப்துல்ஹன்னா | பேருந்துநிலையகடைஎண்.2 2017–2018 | ரூ.53270/– | 28.01.2018இல் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. |
| 3 | 120/1212 | ஏம்.செல்வக்குமார் | முனிசிபல் இன்ஜியரிங் காலணிகடை எண்.2 2017–2018 | ரூ.158168/– | 25.07.2017இல் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. |
| 4 | 120/1617 | எ.சந்திரசேகரன் | பேருந்துநிலையகடைஎண்.2 2017–2018 | ரூ.139413/– | 30.03.2017இல் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. |
| | | | மொத்தம் | ரூ.363845/– | |

2017–18 ஆம் ஆண்டு வாடகை தொகை செலுத்தாத காரணத்தினால் பூட்டி சீல் வைக்கப்பட்டு, மறுஏலம் 2020–2021 ஆம் நிதி ஆண்டு ஏலவிடப்பட்டுள்ளது. புதிய நபர்களுக்கு மேற்காணும் கடை ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் கடைகளின் கேட்பினை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மேற்கண்ட தொகையினை கேட்பிலிருந்து நீக்கம் செய்யலாம்.
(ந.க.எண். 855 /2023/அ2)
**தீர்மான எண் :** 287– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **பொருள் எண்–35:**

பேருந்து நிலையத்திற்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனமான பேருந்துநியைத்தில்பேருந்துநிலையநுழைவுகட்டணத்திற்குசேவைவரி கட்டுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.2017–2018ம் ஆண்டிற்கு ரூ.24852/– சேவைவரி தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதை கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | கேட்பு எண் | குத்தகைதாரர் பெயர் | இனம் | மொத்த நிலுவைத் தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 120/114 | ஆர்.ரமேஷ் | பேருந்துநிலைய நுழைவுகட்டணம் 2017–2018 | ரூ.24852/– | பேருந்துநிலைய நுழைவுகட்டணம் சேவை வரி நீக்கம் செய்யலாம். |

**அலுவலக குறிப்பு :** மேற்கண்ட தொகையினை கேட்பிலிருந்து நீக்கம் செய்யலாம்.

(ந.க.எண். 855 /2023/அ2)

**தீர்மான எண் : 288–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–36:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான சிறைக்காடு உரக்கிடங்கில் நகராட்சி பகுதியிலிருந்து வெளியேறும் கழிவுகளில் மக்கும் குப்பைகளை பிரித்து உரமாக தயாரிக்கப்பட்டு பின்பு மக்காத கழிவுகளை தரம் பிரித்து மறு சுழற்சிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மீதம் தேவையற்ற கழிவுகள் , சாக்கடைக்கழிவுகளை சிறைக்காடு உரக்கிடங்கில் கொட்டி வைக்கப்படும் கழிவுகளை அப்புறப்படுத்தும் பணிகளை செய்வதற்கு ஜெயின்டோசர் வாகனத்தை வெளியிலிருந்து வாடகை மூலமாக பணிகள் செய்வதற்கு இந்நகர்மன்றத்தீர்மானம் எண்-201 நாள்: 30.01.2023 இன் படி ரூ 1.50 இலட்சம் அனுமதி அளித்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய இசையா அசோசியேட்ஸ் பழைய வத்தலக்குண்டு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய உத்திரவு வழங்கி , 13 நாட்கள் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்குண்டான பட்டியல் தொகை ரூ 149000/–ஐ வழங்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது மேற்காணும் பணிகளை மேலும் உத்தேசமாக 8 நாட்கள் செய்வதற்கு உத்தேச தொகை ரூ1.00/– இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 2229 / 2022 / எச்1

**தீர்மான எண் : 289–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–37:</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்–17404/2022/எம்1, நாள்.10.03.2023 அவர்களின் கடிதத்தின் படி, போடிநாயக்கனூர் நகராட்சி ,வார்டு எண்–8 ,சுப்புராஜ் நகர் தெரு எண்–1ல் அமைந்துள்ள 1ம் பகுதி நகரவைப்பள்ளியில் ரூ.27.00/– இலட்சம் மதிப்பீட்டில் சமையல் கூடம் கட்டும் பணிக்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 0995/2023/இ1)**
**தீர்மான எண் : 290–** அனுமதிக்கப்பட்டது.

❖ **பொருள் எண்–38:**

போடிநாயக்கனூர் நகராட்சியில் **2022–23** பொதுநிதியின் கீழ், நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி கீழ்காணும் பணிக்கு **08.03.2023**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|---|
| 1 | **போடிநாயக்கனூர் நகராட்சி நுண் உரக்குடில்களில் சானிட்டரி கழிவுகளை எரித்து அப்புறப்படுத்த எரிப்பான்**(Incinirator) –**1 எண்ணம்** விநியோகம் செய்யும் பணி | **ரூ.3,50,000/–** | M/S. System Engineering, Perungalathur, Chennai-63 | **3,42,200/–** |
| | | | S.S.Enterprises, Chennai-68 | **3,45,500/–** |

**அலுவலக குறிப்பு :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S. System Engineering , Perungalathur, Chennai-63 ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.** 3727/2023/**இ**1)
**தீர்மான எண் : 291–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **பொருள் எண்–39:**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பொதுசுகாதாரப்பணிகளுக்கு **9** வாகனங்கள் இயங்கிவருகிறது. அதனை ஓட்டுவதற்கு **3** ஓட்டுநர்கள் மட்டுமே நிரந்தரப் பணியிடத்தில் பணிபுரிந்து வருகிறார்கள் மேற்காணும் வாகனங்களை கூடுதலாக ஓட்டுவதற்கு டெக்ஸ்கோ ஓட்டுநர்கள் **4** பணியமர்த்தப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தனர். அதில் அகிலன் என்பவர் இறந்து விட்டார், கனகராஜ் என்பவர் நீண்ட காலமாக பணிக்கு வரவில்லை தற்போது **2** டெக்ஸ்கோ ஓட்டுநர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் ஒப்பந்த காலம் வரும் **17.02.23** உடன் நிறைவடைகிறது. எனவே இந்நிலையில் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் வரும் **18.02.23** முதல் **30.04.23** வரை உள்ள காலத்திற்கு திரு.இராஜபெருமாள், திரு.மாயாண்டி ஆகிய இரு டெக்ஸ்கோ ஓட்டுநர்களை பணி நீட்த்திடவும் அதற்கான உத்தேச

செலவினம் ரூ.**1,25,000** இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:** பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று திருவாளர்கள் இராஜபெருமாள் மற்றும் மாயாண்டி ஆகிய **2** டெக்ஸ்கோ ஒட்டுநர்கள் **18.02.2023** முதல் **30.04.2023** வரை நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.**1,25,000/–**க்கு ஒப்புதல் அளிக்கலாம்

**( ந.க.எண். 0404/2023/எச்2)**

**தீர்மான எண் :** 292– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) திருமதி.ச.ராஜராஜேஸ்வரி
நகர்மன்ற தலைவர்

// உண்மைநகல் //

ஆணையாளார்(கூ.பொ)
போடிநாயக்கனூர் நகராட்சி